# விபூதி ருத்ராக்ஷ

# மஹத்வ விளக்கம்



சோளங்கிபுரம் - சிவ அருணகிரி மு

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# விபூதி ருத்ராக்ஷ மஹாத்வ விளக்கம்.

---

இஃது

சித்தாந்த சைவ சரபம்

சோளங்கிபுரம்,

**ஸ்ரீலஸ்ரீ சிவ அருணகிரி முதலியார்**

அவர்களால் இயற்றப்பட்டு

கண்டமாணிக்கம்

ஸ்ரீமாந். நா. பிச. வெ. பிச்சகுட்டிச் செட்டியார்

அவர்கள் நல்லாதரவால் (இரண்டாம் பதிப்பு)

பதிப்பிக்கப்பட்டது.

அக்ஷய வருஷ கார்த்திகை மீ ௧௨

1926

இதன் விலை அணா 3.

PRINTED AT
THE NOBLE PRESS,
MADRAS S.E ,

*(Copy-right)*

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

---

சித்தாந்தசைவம் என்னும் வைதிகசைவ சமயாதீதமானது உலகத்திலுள்ள பல சமயங்களையும் தனக்குச் சோபானங்களாகக் கொண்டு அவற்றிற்கெல்லாம் தாயகமாய் விளங்கியிருந்தும், அது தக்கபரிபாலனமின்றிக் குன்றியிருத்தல் பற்றி அதன் அபிவிருத்தியின் பொருட்டு, இரங்கூனிலுள்ள சைவாபிமானிகளென்னும் ஸ்ரீமான்களாகிய நகரத்தார்கள், திருத்தொண்டர் புராணமென்று வழங்கும் பெரியபுராணத்தின் ஓர் பகுதியாகிய ஸ்ரீ சுந்தரமூர்த்திசுவாமிகள் புராணத்தைத் தமது பாடசாலையில் சுமார் ஒன்பதுமாத காலமாக அடியேனைக்கொண்டு பிரசங்கஞ் செய்வித்தார்கள். சைவர்களுள் பெரும்பாலர் வேதோக்தமான விபூதி ருத்ராக்ஷ தாரணம் அளவுக்கடங்காத மகிமையுடையதென்று உணராது "தந்தை எவ்வழி

தனயன் அவ்வழி'' என்றபடி அழுதுண்டாகும்படி அணிகல மாத்திரத்தானே காலங்கழித்ததன்றி, அவர்களும் உண்மையறிந்துய்யுமவண்ணம் ''விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்'' என்னும் ஒரு நூல் இயற்றித் தரும்படி, குருலிங்கசங்கம பக்தியிற் சிறந்தவரும், சைவசாரமுடைய அடியார்களுக்குக் குறைவின்றிக் கொடுத்தவருமான கொத்தமங்கலம் ஸ்ரீமான் சி. ராம. அ. இலக்குமணச் செட்டியாரவர்கள் அடியேனைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்கள் விருப்பத்திற்கிணங்க இச் சைவசமயமே மெய்ச்சமயமென்றும், அதனைப் பரிபாலனம் பண்ணுதலே பெரும் புண்ணியமென்றும், இளமைதொட்டு எனது அறிவில் ஓங்கி வளர்ந்த உண்மையுணர்ச்சியினால் அபிமானம் மிக்கு, அதனையே கடைப்பிடியாகப்பிடித்து, இதுகாறும் உண்மை ஞானம் பரவுதற்கேதுவான முயற்சிகளையே தலைநின்றுசெய்து போதரும் அடியேனால் முற்பவப் புண்ணிய நற்பயன் மேலிட இச்சிறு சைவநூல் யாவருக்கும் பிரயோசனமாகும்படி இயற்றப்பட்டது. இதைக் கண்ணுறும் நல்லறிஞர்கள் தங்கள் தங்கள் மக்கட்கும், சைவ சமயத்திற்பிறந்த பாக்கியவான்களுக்கும், விபூதி ருத்ராக்ஷ

தாரண மஹத்வத்தை அடிக்கடி எடுத்துப் போதிப் பாராயின் நம் வைதிகசைவம் குன்றின்மேலிட்ட விளக்குபோல் பிரகாசமடையத் தடையின்று. இந் நூல் சைவர்களுக்குப் பெரிதும் பயன் தருவதாயிருந்த மையின் 2500 பிரதிகள் விரைவில் செலவாய்விட் டன. இதனை மீண்டும் அச்சிலேற்றி லோகோபகார மாகப் பிரகடனஞ் செய்யும்படி என்னை உழுவலன்பு வாய்ந்த சைவத் திருவாளர் கண்டமாணிக்கம் நா. பிச. லெ. பிச்சக்குட்டிச் செட்டியாராம் பெருந்தகையாளர் வற் புறுத்தினமையால் இவ்விரண்டாம் பதிப்பு வெளிப் படுத்தலாயிற்று. இதில் இன்னுஞ் சில முக்கிய விஷ யங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. இப்புண்ணிய சீலருக் குச் சைவவுலகம் எக்காலமும் நன்றிபாராட்டக் கடப் பாடுடையது. இவர்கள் ஸ்ரீ பசுபதியின் திருவருளுக் குப் பாத்திரராகி என்றும் அழியாத புகழையும், செல் வத்தையும், சிவ புண்ணியத்தையும் பெற்று ஓங்கி வாழ்வார்களாக. இணையில் பெருமைதாங்கிய இளம் பிறை சூடிய இறைவன் திருவருள் முன்னிற்க. சுபம்!

சோளங்கிபுரம்
அக்ஷய ஹு
கார்த்திகை மீ ௧௨

சோ. சிவ அருணகிரி முதலியார்.

சிவமயம்.

# திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ ஜ்ஞான சம்பந்த குருப்யோ நம:

# விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்.

---

## காப்பு.

*நற்குஞ்சரக்கன்று நண்ணிற் கலைஞானங்*
*கற்குஞ்சரக்கன்று காண்.*

## சிவசின்னங்கள்.

*பரம சிவனமலன் பத்தர்க்குச் சின்னம்*
*உருவுடலிற் கண்டிகையு நீறும்.*

நெடிய கடல் சூழ்ந்த இந்நிலவுலகத்திலுள்ள சமயங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்ததும், உயர்வொப்பற்றதும், உண்மையானதும், என்றுந்திரியாத இயல்புடையதுமாயுள்ளது சைவ சித்தாந்த மொன்றேயாம். இச்சித்தாந்தம் சிவசம்பந்த முடைமையின் சைவமெனப்பட்டது. பட்டிவை இது கடவுள், ஆன்மா.

மலம், மாயை, கன்மம் ஆகிய ஐம்பொருள்களின் இயல்பு களை உள்ள உள்ளவாறு உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டி விளக்கும் பேராற்றலுடையது. இது சமயங்களுள் ஒன்றாயும் சமயங்கடந்த மோனசம ரசமாயும் சிறப்புற்றொளிரும் வல்லபமுடையது. இதனைப் பத்திநெறி யெனவும் முத்திநெறி யெனவும் உண்மை ஞானிகள் மகிழ்ந்து கூறுவர். எந்தச் சமயத்தின் கொள்கையும் இச்சமயத்தின் ஓர் பகுதியிலடங்கும். இதன் கொள்கையோ அவ்வாறு அடங்குவதன்று. சைவத்தில் அடங்காத ஒருண்மையை வேறொருசமயம் அரிதாகக்கண்டுகூறிற்றென்பது யாண்டுஞ்சொல்லப்பட வில்லை. மற்றச் சமயங்களிலே காணப்படாத அரிய பெரிய உண்மைகள் பல சைவத்திலே காணப்படுதல் மெய்கண்ட சாஸ்திரங்களை யோதி யுணரும் புண்ணிய பரிபாகமுடைய நல்லறிவாளர்க்கே நனிவிளங்கும். ஆதலால் உலகத்திலுள்ள சமயங்கள் ஒன்றையும் வெறுக்காது, அவற்றையும் அவற்றில் உபாசிக்கப்படுந்தெய்வங்களையுந் தனக்கு அங்கங்களாகக் கொண்டு அவற்றின் சிரசாய் விளங்கலால் சித்தாந்தசைவம் எனச் சிறப்புப் பெயர் பெற்றொளிர்கின்றது. இந்தச் சித்தாந்த சைவத்

திற்கு எந்த சமயமும் விரோதமின்று. சைவர்கள் சைவசமயத்தை அநுஷ்டிப்பதோடு சைவத்திறமாகிய சித்தாந்த நெறியைக் கடைப்பிடித்தொழுக வேண்டு மென்பதே சிவஞானிகளின் துணிபு. அவ்வாறு ஒழுகு கின்றவர்களே சித்தாந்த சைவர் எனப்படுவர். சித் தாந்த சைவம் ஒன்றே ஜகத்காரண வஸ்துவாகிய பிர மத்தை உருவமாகவும் அருவமாகவும், அருவுருவமாகவும் அதீதமாகவும் வழிபடும்படி போதிக்கின்றது. அன்றி யும், அப்பரம்பொருளுக்குத் தன்னை அடிமையாகவும், பின்னர் சற்புத்திரனாகவும், அதன்மேல் சிநேகனாகவும், முடிவில் அதுவே தானாகவும் உபாசிக்கும்படிச் செப்பு கின்றது. இத்தகைய சிறந்த நலங்கள் வேறு சம யத்தில் கிடையா. ஆதலால் இதுவே தாயகம் என் பதற்கு யாதொரு ஐயமுமின்று. இவ்வுண்மையினை ஸ்ரீ தாயுமான சுவாமிகளும், "சைவ முதலாமளவில் சமய முமம் வகுத்துமேற் சமயங்கடந்த மோன, சமரசம் வகுத்தநீ" எனவும், "மாலறவுஞ் சைவமுதல் மதங் களாகி மதாதீதமான வருளமரபு வாழி" எனவும், "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டும்," எனவும்,

"இப்பரிசாஞ் சமயமுமா யல்லவாகி யாதுசமயமும் வணங்க மியல்பதாகி" எனவும், "அயர்வறச் சென்னியில்வைத்த ராஜாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவ மழகிதந்தோ" எனவும் "இதுவன்றித் தாயகம் வேறில்லை யில்லை, சந்தரக் கற்பகம்போ லருளைக்காட்டுந் தக்கநெறி யிந்நெறியே தான் சன்மார்க்கம்" எனவும் வற்புறுத்தியுள்ளார்கள். உலகத்திற்கு எக்காலமும் நன்மை தரத்தக்கதும், சிறப்பிற்கு உறுதி பயப்பதும் இச்சித்தாந்த சைவமே.

இச்சித்தாந்த சைவத்தில் பிரதிபாதிக்கப்படும் பரம்பொருள் பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்னும் குணமூர்த்திகள் மூவருக்குந் துரியமாயும், சுருதி முடிகள் கொண்டாடும் நிகரில் பெருமைதாங்கிய பிரணவத்தின் நான்காவதான அர்த்தமாத்திரையின் பொருளாயும், தோன்றுவன எல்லாவற்றிற்குந் தோன்றுமிடமா யுள்ளவருமான சிவபரம்பொருளேயாம். இச்சிவத்தினது இயல்பு சத்தும் சித்துமாய் இருதன்மையவாம். அது ஆகாச சொரூபமாம், ஆநந்தம் அதிலடங்கும். ஆநந்தமாவது எண்குணங்களாம். இக்குணங்களில் ஆன்மாக்களின்மேல் வைத்த கருணைக்குணமே பரா

சத்தி எனப்படும். இச்சராணா சத்தியின் வசப்பட்டு நின்றசிவம் அந்நிலையிற் பதியெனவும், பரசிவமெனவும் சொல்லப்படும். அப்பதியின் சந்நிதியில் உலகம் ஐந் தொழிற்படும். பதியாசத திருவுருவங் கொண்டபோது அந்தத் திருமேனியில் இடமைசயாசப பூதத நீறே விபூதி எனவும், அந்தத் திருமேனியின் நயனங்களி னின்றுந் தோன்றிய கண்மணிகளே ருத்ராக்ஷம் என வுஞ் சொல்லப்படும். இவ்விரண்டின் பெருமையை இச் சிறுநூல்விளக்கலால் இந்நூலுக்கு "விபூதி ருத்ராக்ஷ மஹத்வ விளக்கம்" என்னும் பெயர் சூட்டப்பட்டது. இவ்விரண்டு பொருள்களே சிவசம்பந்தமுடைய சிவ சின்னங்கள் எனவும், இறைவனிடத்தினின்றுந் தோன் றினபடியால் நிர்மலத்தன்மையுடைய பரமாந்தரங்க ஞான சாதனங்கள் எனவும், அருட்சத்தி தோய்தலால் சிவ சத்தி ரூபங்கள் எனவும் சொல்லப்படுகின்றன. இவை ஆபரணமாகத் தரித்தலானும் சைவபூஷணம் எனவுங் கூறப்படும்.

தனது சடையில் சொருகப்பட்ட திங்களி யம், யோகிரம முதலியவற்றை எனது நாயகி தரிப்ப தற்குக் கொடுக்கின்றாளோ அவள் குலங்கள் எனக் கூறப்

படான. அதுபோல விபூதிருத்ராக்ஷ சிவசின்னங்களை எவன தரிககககூசுகின்ருனே அவன் உண்மைசசைவ னெனக கூறப்படான். எலலா ஆபரணஙகளைத் துறநதாலும திருமங்கிலியததை மாததிரம துறககக குலமகள எவவாறு உடனபடாடடாளோ அதுபோல ஒருவன எவவித அணிகளையுந தரியாதிருநதாலும சிவபெருமானாலே தரப்பட்ட சிவ சின்னஙகளாகிய சைவ பூஷணஙகளை மாததிரந துறககாது அவறறை அன்போடு பணிவதையே ஆவசியமாகக கொள்வன். ஆதலால் விபூதி ருத்ராக்ஷ தாரணம் யாவருக்கும் இன்றியமையாத பரம சாதனமென்று இஙகு காட்டப் பட்டது. காமக கிழத்திபரது உடமபிலே காணப் படும ஆடை, சாநது, ஆபரணம காமுகரை வசீகரிதது இன்பஞ் செயயுமாறுபோல ஞான உணர்ச்சி யுடையார் யாரையும் காட்சி மாததிரததில் வசீகரிதது இன்பஞ் செய்தல் காரணமாய்ச சிவபகதியுடையா ரனைவருககும விபூதி ருததிராக்ஷ தாரணம திருவேடமாகக் கொள ளப்பட்டது. இவ் வுண்மையினை "சேலுங கயலுந திளைககுங் கண்ணரிளங் கொஙகையிற் செஙகுங்குமம- போலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர்

போற்றிசைப்ப." என்னுந் திருப் பல்லாண்டு திருப் பாசுரத்தால் சிந்தித்து மகிழ்க.

## விபூதிக்குரிய விபூதி, பஸிதம், பஸ்மம், க்ஷாரம், ரக்ஷை என்னும் ஐந்து பெயர்களுள்

## விபூதியின் பொருள்.

விபூதி என்பதற்கு மேலான ஐசுவரியம் என்று பொருள். வி-மேலான; பூதி-ஐசுவரியம்; எனவே, தன்னைத் தரித்தவர்களுக்கு என்றும் அழிவில்லாத மோட்ச சாம்பிராஜ்ஜியமான மேலான ஐசுவரியத்தைத் தருதலால் விபூதி என்னும் பெயர்பெற்றது. இங்கே ஐசுவரியம் என்றது சிந்தையும் மொழியும் செல்லா நிலைமைத்தாகிய பரமுத்தியை. இவ்வாறு பொருள் கொள்வதோடு விநாயகன் என்ற சொல்லுக்குத் தனக்கு மேலொரு நாயகன் இல்லாதவன் என்று பொருள் கூறுவதுபோல விபூதி என்ற பதத்துக்குந் தனக்கு மேலான ஐசுவரியம் இல்லாததென்றுஞ் சொல்லவும்படும். அன்றியும் வி-சிவபெருமான்; பூ-பாவனை; தி-அடைதல், எனப் பொருள்கொண்டு சிவதத்துவ பாவனையை விளக்கும் இயல்புடையது என்று விசேடப் பொருள் பகர

வதற்கும் உரித்தாயுள்ளது. இவ்வுண்மை வாதுளாகம மத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. விபூதிக்குப் பூதி யென்னும் பெயருமுண்டு.

## மற்றைய பெயர்களின் பொருள்

ஆன்மாக்களுடைய பாவங்களனைத்தையும் நீறாக்கி விடலால் நீறு அல்லது பஸ்பம் (பற்பம்) என்றும், அஞ்ஞானத்தை நீக்கி மெஞ்ஞானமாகிய சிவஞானத்தை அளித்தலால் பஸிதம் என்றும், ஆணவாதி மலபந்தங்களைக் கழுவுதலால் க்ஷாரம் என்றும், பூதப்பிரேத பிசாசம், பிலலி, சூனியம் முதலியவற்றா லுண்டாகும் துன்பங்களின்றும் நீக்கி இரக்ஷித்தலால் ரக்ஷை அல்லது காப்பு என்றும் சொல்லப்படுகின்றது.

## விபூதி வேதோக்தமானது.

வேதத்தின் ஞானகாண்டப் பொருளை விளக்க எழுந்த நூற்றெட்டு உபநிடதங்களுள் விபூதியைப் பற்றிச் சிறப்பித்துக் கூறும் உபநிடதங்கள் பதினைந்து. அவற்றுள் பஸ்மஜாபாலம், காலாக்னிருத்ரம், ஜாபாலி என்னும் உபநிடதங்கள் பஸ்ம வைபவத்தைத் தாரண விதியோடு விளக்கிக் கூறுகின்றன. பிருஹஜ்ஜாபா

லயோ பிரம வித்தையின் அங்கமாகிய திருநீறணிதலை முறையுடன் விதித்தோதுவதன்றி திருநீற்றை வேத விதிப்படி உண்டாக்கும் முறையையும் கூறுகின்றது. வைதிகர்களின் ஆசாரத்தில் விபூதி தாரண சம்பிரதாயம் இதனை வழியே நீண்டகாலமாயுண்டு. இவ்வுபநிடதத்தில் திருநீறு தரித்தல் எல்லாக் கன்மங்களுக்கும் முக்கியாங்கமாகவும், ஞானாங்கமாகவும் நிரூபிக்கப்பட்டிருக்கின்றது. நூற்றெட்டு உப நிடதங்களின் சாரமாய் விளங்கும் தசோப நிடதங்களில் ஆதியந்தங்களிலுள்ள ஈசாவாஸ்ய பிருஹதாரண்ய உபநிடதங்களிலும், தைத்திரீய உபநிடதத்திலும், இந்தத்திருநீற்றின் பிரபாவம் பிரகாசப்படுத்தப்பட் டிருக்கின்றது. இதுவுமல்லாமல் காமிகமுதல் வாதுளாந்தமாயுள்ள இருபத்தெட்டு சிவாகமங்களிலும், அவற்றின் பிரிவுகளாகிய உபாகமங்களிலும், பராசர, கௌதம, மநுவாதி ஸ்மிருதிகளிலும், சைவம், கூர்மம், இலிங்கம், ஸ்காந்த முதலிய புராணங்களிலும், பாரதம், இராமாயணம், சிவரஹஸ்யம் என்னும் இதிகாசங்களிலும் இத் திருநீற்றின் பெருமை விரிவாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றது. அன்றியும் பரமாசாரிய மூர்த்தி

களுள் ஒருவராகிய அம்பிகையின் அருட்பாலை யுண்டருளிய திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தாம் அருளிச்செய்த தமிழ் வேதத்திலே "திருநீற்றுப்பதிகம்" ஒன்றோதி, அற்புதச் செய்கை செய்து, அதன் மகிமையைப் புறச் சமயிகளும் உணருமபடி விளக்கிக் காட்டியுள்ளார். வேதோக்தமாயும், சிவ சின்னமாயும் விளங்கும் திருநீற்றைப் பொதுவாகவும் சிறப்பாகவும் எடுத்துப் பேசும் முதனூல்களும் வழிநூல்களும் அளவுகடங்காதாதலால் இதுவே வைதிகமென்பது வெள்ளிடை மலைபோல் தெள்ளிதிலுணரக் கிடக்கின்றது. இதை வேறு வழிநூல்கள் ஒப்பினும் ஒப்பாவிடினும் யாதுங் குறைவில்லை. திருநீறு வைதிகமெனபது மாலயன் முதலிய பெரிய தேவர்களாலும் மறுக்கப்படாத பரம சித்தாந்தமாம். இதைச்சிலர் அகாரண சிவத்துவேஷத்தால் தம்மனம் போனவாறு வைதிகமல்லவென்று நிந்திப்பது ஜன்மாந்தரப் பாவப்பயனையன்றி வேறல்ல. உண்மை நூல்களை முறையே ஓதியுணராத குறையே அவர்களை அவ்வாறு செய்யத் தூண்டி நரகத்திலிடர்ப் படுத்துகின்றது.

## விபூதி தாரணம் நித்தியாங்கம்.

விபூதி தாரணமில்லாமல் ஒருவன் அன்னத்தை யாவது நீரையாவது பருகுதலும் வேறே எந்தக் கருமத்தையாவது செய்தலுங் கூடாது. எவன் பஸ்ம தாரணத்தை விட்டுக் கன்மத்தை அநுஷ்டிக்கின்றானோ அவனுக்குப் பந்தநிவிர்த்தியில்லை. சிவமூர்த்தி என்றஅக்கினிக்கு உத்தமமான வீரியம பஸ்மமாதலின் பஸ்மாவுடன் கூடிய ஒருவன் எக்காலத்தும வீரியமுள்ள வனாகவேயிருக்கிறான். பஸ்மத்துடன் கூடினவன்செய்யுந்தோஷம் பஸ்மமென்ற அக்கினியால் தகிக்கப்படுகிறது. திருநீறின்றி இருக்கும் நெற்றியைச் சுடு; சிவாலயமின்றி இருக்கும் கிராமத்தைக்கொளுத்து; சிவார்ச்சனையின்றி இருக்கும் ஜன்மத்தில தீயை வை; சிவாசிரயமின்றி இருக்கும் வித்தைகளை எரித்து விடு என்று பிருஹஜ்ஜாபாலோபநிடதமும்,விபூதியணிதலினின்று நவறுதல்கூடாதுஎன்று தைத்திரீயோபநிடதமும வற புறுத்தி நல்வழி காட்டியிருக்கின்றன. ஞானத்தாயாராகிய ஔவைப் பிராட்டியாரும் "நீறில்லா நெற்றிபாழ்" என்று மக்களுக்கு நல்வழிகூற வந்தபோது அருளிச் செய்தனர். "திருநீறு இட்டு யார்கெட்டார், சிவனை

மறந்து யார் உயந்தார்" எனனும் பழமொழியும் விபூதி இடடுககெடடவா ஒருவருமிலலை யெனறு பிரகாசப்படுகதுகிறது. அன்றியும், மோட்சமடையவிருமபுவான தனதுபிறப்பற இதைக கொளவாளுக என்றும, முமூட்சுவே இதற்கு அதிகாரி எனறும, பாவநாசததுககும், பரமசாமராஜ்ஜியமான மோடசததுககும, திருநீறே காரணமென்றும, காமகாண்டங்களும ஞானகாண்டஙகளும முறையிடுமாயின இதைப்பாககிலும சிறநத நிததியாங்கம வேறொன்றுமிலலை யெனபது பசுமரததிலறைநத ஆணியாம. வைதிக பாசுபதவிரததினை பகிரமுகவிரதம இப்பஸ்மதாரணமே. ஆகையினாலே வெண்ணீற்றை எத்தகையோரும அணிய வேண்டுமென்றும், அதனாலே எல்லாப்பலனும உண்டாகுமென்றும நிசசயிககப்பட்டது.

அதுவுமல்லாமல் பசுககளாகிய நாம நமமைப் பந்திததுக கிடக்கும் மலததைப் போக்கவேண்டின் தேவர் யாவரும ஒவ்வொருறுப்பினும வசிககபபெற்ற பசுவின் மலததைத தகித்து அணியவேண்டியது அவசியம். நாம் பாசத்தினாலே பநதிக்கப் பட்டமையால பசுவென்னும் பெயா பெறுகிறோம். நம்மைப் போலவே

ஏனையபிராணிகளுள்ளும பசுஎன்னும ஓர்பிராணியிருக்கிறது. அது ஆயராற் கட்டப்படுவதால பசுவென்னும பெயரைக கொண்டிருக்கிறது. நாம நமது மலத்தை எரித்துச்சிவத்தை யடைவதற்கு அறிகுறியாக அப்பசுவின மலத்தைத் தகித்து, உடலில் அணிந்து, சிவாராதனைச் செய்யும்படி சிவாஞ்ஞை ஏற்பட்டுள்ளது. ஆதலால் பசுக்களாகிய நமது இயல்பையும், நம்மைப் பந்தித்திருக்கும மலத்தினியல்பையும, அம்மலத்தைத தகித்துச சிவாராதனஞ் செய்யும இயல்பையும் ஆகிய இவற்றையெல்லாம நாடோறும் நினைப்பூட்டுதலின் ஸர்வோத்தமமான விபூதி தாரணத்தினும் மிக்கது ஒன்றுமே கிடையாது. இந்தத் தாரணவிபவம் சைவசமயத்தில் மாத்திரமன்று, அந்நிய மதத்தினராலும் பூஷிக்கப்பட்டு உலகமெங்கும் பரவி மேன்மேலும் ஒளிபெற்று வருகின்றது. ஆழ்வார்களும் விபூதி தரித்தார்களென்பதற்கு "கவளக் களிறட்டபிரான் றிருநாமத்தாற், றவளப்பொடி கொண்டு நீரிட்டிடுமின்றணியுமே" என்றும், "நீறு செவ்வேயிடக் காணினெடுமாலடியா ரென்றோடும்" என்றும் மயர்வற மதிநல மருளப்பெற்ற பிரபந்த ஜன

க்ஷஸ்தராகிய நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் சாதித்ததையே போதியசானறும.

## விபூதி தாரண வகை.

விபூதியை உத்தூளனமாகவும திரிபுண்டரமாகவும் தரிக்கவேண்டும. உத்தூளனமாவது-பரவப்பூசுதல். திரிபுண்டரமாவது - மூன்று குறியாகத் தரித்தல், (திரி-மூன்று, புண்டரம-குறி) திரிபுண்டரமாகத் தரிக்கத்தக்க ஸ்தானங்கள் சிரம, நெற்றி, மார்பு, கொப்பூழ், இருமுழந்தாள்கள், இருபுயங்கள், இருமுழங்கைகள், இருமணிக்கட்டுகள், இருவிலாப்புறம், முதுகு, கழுத்து என்னும பதினறுமாம. இவற்றுள் விலாப்புறம இரண்டையும நீக்கிச் செவிகளிரண்டையுங் கொள்வதுமுண்டு. முழங்கைகளையும மணிக்கட்டுகளையும நீக்கிப் பன்னிரண்டு ஸ்தானங்களையே கொள்வதுமுண்டு. இவ்வாறு பதினறு ஸ்தானங்களிலும பன்னிரண்டு ஸ்தானங்களிலும தரிப்பதற்குக் காரணம் யாதெனின சரியை, கிரியை, யோகம, ஞானம என்னும நான்கும், ஒவ்வொன்றும் நந்நான்காய்ப் பதினறு வகைப்படுதலின் ஒருவன் அவ்வத்தானங்களிற் றரித்துச சென்றால் மேலான ஐசுவரியமாகிய மோட்சம்

அடையப் பெறுவானென்பதாம். அன்றியும் சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம் ஆகிய நான்கும், நந்நான்காகிப் பதினாறுகளின அவ்வவத்தைகளைச் சடக்கின் (விபூதியாம) முத்தியாம என்பதாம.

இனி பன்னிரண்டு ஸ்தானங்களை ஆராயுமிடத்து பன்னிரு முக்குறி முப்பத்தாறுகளின ஆன்ம தத்துவம, வித்தியாதத்துவம, சிவதத்துவம என்னும முப்பத்தாறு தத்துவங்களையும நேதிகளைநது தரிக்கின் முத்தி சித்தியாம என்பதாம. திரிபுண்டரந்தரிக்குமிடத்து நெற்றியில் இரண்டு கடைப் புருவ வெல்லை வரையும் தரிக்கவேண்டும். மார்பிலும புயங்களிலும ஆறங்குல நீளந்தரித்தல் வேண்டும. மற்றைய ஸ்தானங்களில் ஒவ்வோரங்குல நீளந்தரித்தல் வேண்டும. எந்தக் காலத்திலும ஒன்றையொன்று நீண்டலாகாது. மூன்று குறிகளின் இடைவெளி ஒவ்வோரங்குல அளவினதா யிருக்கவேண்டும. சிவதீக்ஷைப்பெற்ற ஒவ்வொருவரும் காலை, உச்சி, மாலை, என்னும மூன்று காலங்களில் மாத்திரம் ஜலத்துடன் கூட்டித்தரிக்க வேண்டும். அவ்வாறு தரிக்கும்போது உச்சரிக்கவேண்டிய மந்திரங்களை எமது "சைவ நித்தியாநுஷ்டானம்"

என்னும் நூலிற்காணக. மற்றக் காலங்களில் ஜலம் சேர்க்காது உத்தூளனமாகத் தரிக்கவேண்டும். சிவ தீக்ஷையில்லாத ஆடவர்களும், பெண்களும், வைதிக சந்நியாசிகளும், பிரமசாரிகளும், வானப்பிரஸ்தர்களும், கன்னிகைகளும் உச்சி காலத்துக்கு முன்னே ஜலங் கூட்டித் தரிக்கலாம். பின் ஜலங்கூட்டாமலே உத்தூளனமாகவே தரிக்கவேண்டும். வீட்டுக்கு விலக்காகிய ஸ்திரீகள் ஜலத்தில் குழைத்துத் தரிப்பாராயின் அந்தநீர் கள்ளேயாகும். கருநிற விபூதி நோயை உண்டாக்குதலாலும், செந்நிற விபூதி கீர்த்தியைப் போக்குதலாலும், புகை நிற விபூதி ஆயுளைக் குறைப்பதாலும், பொன்னிறவிபூதி சம்பத்தைக் கெடுத்தலாலும் இவ்வகையான விபூதிகளை ஒருபோதுந் தரிக்கலாகாது. சகல ஐசுவரியங்களையுந் தரும் வெண்ணிற விபூதியே தரிக்கற்பாலது. மேலும் சிவதீக்ஷையில்லாதவர் கொடுத்த விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், ஒரு கையால் வாங்கிய விபூதியும், மதுமாமிஸ பட்சணிகள் தரும் விபூதியும் எந்தக்காலத்திலும் தரிக்கலாகாது. விபூதியைப் பட்டுப்பையிலாவது சம்புடத்திலாவது வைத்துக்கொள்ள வேண்டும். விபூ

தியை வடக்குமுகமாவது, கிழக்குமுகமாவது இருந்து கொண்டு வலக்கையின் நடுவிரல் மூன்றினால் தரிக்க வேண்டும். ஒருவிரலாலேனும், ஒருகையாலேனும் தரிக்கலாகாது. நெற்றியில் தரிக்கிறபோது பூமியிலே சிந்தாவண்ணம் சிரசைச் சிறிது மேல்நோக்கி சிவபெருமானையும், ஆசாரியரையுஞ் சிந்தித்து, “சிவசிவ” என்று உச்சரித்துக்கொண்டே தரிக்கவேண்டும். எப்பொழுதும் தலையை அசைத்துக் கொண்டாவது, கவிழ்ந்து கொண்டாவது, அண்ணாந்து கொண்டாவது, வாயங்காந்து கொண்டாவது தரிக்கலாகாது. ஒருக்கால் விபூதி பூமியிலே சிந்தினால் சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்திசெய்ய வேண்டும். முக்கியமாய் நித்திரைசெய்யப் போகும்போதும், நித்திரைவிட் டெழுந்தபோதும், மலஜல விசர்க்கஞ் செய்து சௌசஞ் செய்தபின்னும், தந்தசுத்தி செய்த பின்னும், சூரியன் உதிக்கும்போதும் அஸ்தமிக்கும் போதும், ஸ்நானஞ்செய்தவுடனும், போஜனத்துக்குப் போகும்போதும், போஜனஞ் செய்தபின்னும் விபூதியைத் தரிக்கவேண்டும். ஆசாரியராவது, சிவனடியாராவது விபூதி தந்தால் அவர்களை நமஸ்கரித்து இரண்டு

கைகளையும் நீட்டி வாங்கி, பக்தியோடு தரித்துக் கொண்டுபின்னும் அவர்களை நமஸ்கரிக்கவேண்டும். சுவாமிக்கு முன்னுவது, குருவுக்கு முன்னுவது, சிவனடியார்களுக்கு முன்னுவது விபூதிதரிக்க நேர்ந்தால் முகத்தைச் சிறிது திருப்பிக்கொண்டு தரிக்கவேண்டும். விபூதியணிந்தே வெளியே புறப்படவேண்டும். விபூதி தரியாதார் முகம் சுடுகாட்டுக்குச் சமமாகும். "பூதி யணியாதவர்கள் புந்தி சுடுகாடு" என்று பெரியாரும் பணித்துள்ளார்.

விபூதி உடம்பில் அணியப்படும் ஒருபொருளாக இருப்பதுமன்றி மருந்தாகவும் உட்கொள்ளுமமேன்மை யுடையது. அதை விசுவாசத்தோடும், சிவபெருமானைச் சிந்தித்தும் உட்கொள்ளின் தீராத எப்பிணியுந் தீரும். ஆகையினலன்றே ஆயுர்வேதமும் திருநீற்றைப் பூசுமருந்தாகவும், புசிக்குமருந்தாகவும் வியந்து கூறிற்று. சஙசரஸமஹிதையும் விபூதியை யுண்ணுவதால் எல்லாப்பாவங்களும் தொலைவதோடு ஸாவதீவினைக்கும் மூலமான ஆணவமலமும் அற்றுப்போமென முழக்கியது. அருந்தினோர்கள் ஆராவமுதமுண்டவராவர்.

## விபூதி நித்தியப் பொருள்.

விபூதியானது குருபஸ்மா, லகுபஸ்மா என இரு வகைப்படும். இவற்றுள் குருபஸ்மா சிவபெருமானே யாம். லகுபஸ்மா அவரது அருட்டிரு மேனியிற் பூத்த திருநீறேயாம். திருப்போரூர் சிதம்பரசுவாமிகளும "ஆதிபகவன ஞானவடிவமுமிற பூத்து நித்தியமாய்" என்று அருளிசசெய்தார். "நீறுபூத்தமேனியனே" என்றுபுகழ்ந்தது தமிழ்வேதம. "நீறுபூத்த நெருப்பு" என்பது உலகவழக்கு. சிவபெருமான் அககினிவடிவின ரும, அககினிககண்ணரும், அககினிதாரணரும, அக கினிபூதேசருமாகலின் அககினியென அவரை வேதங் கள் முழங்காநிற்கும. அன்றியும அவரது இளைய குமாரராகிய சுப்ரமண்ய சுவாமியை "அக்கினிபூ" என்று அவ்வேதங்களே துதிக்கும். அக்கினிவடிவின ராகிய சிவபெருமான் எவ்வாறு நித்தியவஸ்துவோ அது போல அவரது திருமேனியிற் பூத்த திருவெண்ணீ றும் என்றும் அழியாத நித்தியப் பொருளாம். இவ் வுலகத்தில் பஸ்மமாகாதவஸ்து ஒன்றுமே கிடையாது. ஸர்வமும், அந்தமதாவதுநீறு என்றபடி ஒருகாலத்திலே பஸ்மமாகத்தான் முடியவேண்டும். பஸ்மத்தை எத

தன்னைமுறை புடம்வைத்தாலும் நிறை குறையாது. நிறம் மாருது. அழியாது. அப்படியேயிருக்கும். அதுவே அப்படியானல் சிவனர் திருமேனியிற் பூத்த நீற்றைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! சுண்ணத்தி லிருக்கிறது சூட்சுமம் என்ற வாக்கியத்தினகருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது. சுண்ணம் என்பது நீறு. இவ்வுண்மையை உலகத்துக்குணர்த்தவே சத்தியமாவது நீறு, தத்துவமாவதுநீறு, என்று திராவிடவேதம் விதந்தோதியது. அன்றியும் கூர்மபுராணமும் "பிரமதேவர்சிருஷ்டி செய்கையிலேயே நித்தியமாயுள்ள பஸ்ம மஹாத்மியத்தைக்கூறி அதனை பணிந்து கோடற்காகவே நெற்றியைக் குறுக்காகப் படைத்தார்: மேனேக்காகவும், வட்டமாகவும் படைத்தாரல்லர்: அப்படிச் செய்திருந்தும் மூர்க்கர் சிலர் நெற்றியிலே திரிபுண்டர மணிவதில்லை" என்று சந்தாபத்தைச் செய்துள்ளது. மஹாபாரதமும் சாந்தி பர்வத்தில் "தர்மராஜனே! ஆயுள்விர்த்தியை அவாவுவோரும், செல்வத்தை இச்சிப்போரும், வீட்டுபேற்றை விரும்புவோருமான துவிஜர் நாடோறும் பஸ்மதாரணஞ் செய்ய வேண்டும்" என்று அறைந்துள்ளது. இக்கருத்தனைத்தையும் நல்லோர்

பால் கேட்டுத்தெளிக. வீணே விபரீத அறிவு கொள்ளற்க.

## விபூதி இலக்கணம்.

விபூதியாவது யாகாக்கினியினாலாவது, சிவாக்கினியினாலாவது நல்ல இலக்கணமுடைய பசுவின் சாணத்தைக் கொள்ளவேண்டிய முறைப்படிகொண்டு மந்திரங்களாலுருட்டித் தகிப்பித்த திருநீறும். இது வைதிக விபூதியென்றும், சைவ விபூதியென்றும் இருதிறப்படும். அவற்றுள் வைதிக விபூதியாவது - வேதவிதிப்படி செய்யப்பட்ட யாகங்களில் பொடிப்பட்ட நீறும். இது புத்தியை (போகத்தை) மாத்திரம் அளிக்கும். சைவவிபூதியோ - சிவாகமவிதிப்படி சிவதீக்ஷை செய்யப்பட்ட அக்கினியில் பொடிப்பட்டநீறும். இது புத்தி முத்தியாகிய இரண்டையுந் தரும். இவ்விபூதி கற்பம், அநுகற்பம், உபகற்பம் என மூன்று வகைப்படும்.

கற்பமாவது—ஸ்ரீ கைலாசத்தில் வீற்றிருக்கும் இடப தேவருடன் வாழ்கின்ற நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்னும் ஐந்து பசுக்களின் வழியாய சிவாஞ்ஞையால் திருப்பாற் கடலினின்றுந்

தோன்றி, இவ்வகையில் பரவிய உத்தமமான பசுக்களில் கன்றீன்று பத்து தினத்துக்கு உட்பட்டதும், கன்று பிரசவியாத கிடாரியும், நோயுடையதும், கன்று செத்ததும், கிழத்தன்மையுடையதும், மலடும், மலந்தின்பதும், காயமுள்ளதும், வால், காது, கொம்பு அறுந்ததும் ஆகிய இவைகளை யொழித்துச் சிறந்துவிளங்கும் பசுக்களில், பங்குனி மாதத்தில் பசானம் என்னும் நெல்லினது தாளைமேய்ந்த பசுவின் சாணத்தைத் தாமரை இலையில், அஷ்டமி, அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தசி இத்திதிகளில் சத்தியோஜாத மந்திரஞ்சொல்லி ஏற்று, மேலிருக்கும் வழும்பை யொழித்து, வாமதேவ மந்திரஞ்சொல்லி, பஞ்சகௌவியம் விட்டு, அகோரமந்திரஞ் சொல்லிப்பிசைந்து, தற்புருஷமந்திரஞ் சொல்லிக் கையாலுண்டை செய்து, ரா பாகவேனும், உலர்ந்தபின்பேனும், ஓமாக்கினியில் சம்பா நெற்பதருடன் வைத்து, ஈசானமந்திரத்தாற் சுட்டெடுத்து, ஒரு கோடிவஸ்திரத்தில் வடிகட்டி, ஒரு புதுப்பாண்டத்தில் நிரப்பி, விபூதி காயத்திரி மந்திரஞ்சொல்லி, பூமியிலவைத்து மலர்சாத்தி, வெள்ளை

வஸ்திரத்தால் அப்புதுப்பாண்டத்தின் வாயைக்கட்டிப் பத்திரமாகச் சேமித்து வைத்த விபூதியாம்.

அநுகற்பமாவது - சித்திரை மாதத்தில் காட்டிற் சென்று, அங்கு உலர்ந்துகிடக்கும் பசுவின்சாணத்தை யெடுத்துத் தூளாக்கிக், கோசலம்விட்டு, முன்சொன்ன மந்திரங்களாற் பிசைந்து, உருட்டி, மேலே கற்பவிபூதிக்குக்கூறிய முறைப்படி சிவாக்கினியில் விளைவித் தெடுத்த விபூதியாம்.

உபகற்பமாவது-வனத்தில் காட்டாக்கினியினாலுண் டாகிய சாம்பரை யெடுத்துப் பஞ்சகௌவியம் விட்டு, முன்சொன்ன மந்திரங்களைக்கொண்டு பிசைந்து, உருட்டி, சிவாக்கினியில் விளைவித்தெடுத்த விபூதியாம். இத்தன்மைப் பெருமை வாய்ந்த விபூதியின் மகிமையை யுணராது மாட்டுச்சாணியின் சாம்பர் என்று சற்றுங் கூசாது நிந்தித்தல் அறியாமையும் பாவமுமாம்.

## விபூதி தாரண மஹிமை.

ஆதியந்தமில்லாத முழுமுதற் கடவுளாகிய சிவ பெருமானை அளவிறந்தகால முணரினும் அவனருளில் வழி அவர் விளங்கார். அதுபோல தாமார்த்த காம

மோட்சங்களை யளிக்கும் பால்போன்ற நிறமுள்ள திரு வெண்ணீற்றின் றன்மையை நான்கு வேதங்களும் அளத் தற்கரிதென்று கூறுமாயின், அதன் பெருமையை பதி ஞானச் சீலர்களன்றி வேறு யார் உரைக்கவல்லார். வருணாச்சிரமங் கடந்த அவதூதர்களுக்கும் திருநீறு தள்ளற்பாலதன்றென வேதம் விதிக்குமாயின, மற்றைய ஆச்சிரமங்களாகிய பிரமசரியம், கிருஹஸ்தம், வானப் பிரஸ்தம், சந்நியாசம் ஆகிய இவற்றிலிருப்போர் கண் ணேரமேனும் திருநீற்றைத் தள்ளுதற் குரியரோ. இரு பத்தாறுவது உபநிடதமாகிய பிருஹஜ்ஜாபாலம், ஆறு வது ப்ராஹ்மணத்தில், நாராயணரும் ஏனைத்தேவர் களும் விபூதியைத் தங்களுடலிற் றரித்தும், மருந்து போல் உட்கொண்டும் தங்களுக்குண்டாகிய மோகத் தைத் தவிர்த்து மிக்கதேஜஸைப் பெற்றார்கள் என்று கூறப்பட்டுள்ளது. அம்மந்திர வாக்கியங்களின் பொருள் அடியில் வருமாறு:—

"கௌதம முனிவரது விவாஹகாலத்தில் அகலி யைக்கண்டு தேவரனைவரும் காமத்தினாலே பீடிக்கப்பட் டார்கள். அவ்வாறு பீடிக்கப்படவே, அவர்கள் அறி விழந்தவர்களாகித் துர்வாஸ முனிவரையடைந்து, தங்

களுக்குண்டான தோஷத்தை நிவர்த்திசெய்ய வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். உடனே துர்வாஸர் 'அவ்வாறே செய்வேன், சத்ருத்ரீய மந்திரங்கொண்டு மந்திரிக்கப்பட்ட பஸ்மாவை முந்தைநாள் நான் பலருக்குக் கொடுத்து பிரம்மஹத்தி முதலிய பாவங்களை நீக்கியுள்ளேன்" என்று சொல்லிப் பஸ்மாவை மந்திரித்து அவர்களுக்குக் கொடுத்தனர். அவர்களும் அந்தப் பஸ்மாவினால் உடனே தோஷத்தினின்றும் நீங்கி முன்னைய தேஜஸையும் அறிவையும் பெற்றார்கள். அவ்வாறு சதருத்ரீய மந்திரங்கொண்டு மந்திரிக்கப்பட்ட பஸ்மாமாவை உடம்புமுழுதும் பூசிக்கொண்டு பாவம்போககிய அவர்கள், "தோஷத்தினின்றும் விலகினோம், பஸ்மாவினது சாமர்த்தியம் அதிசயிக்கத்தக்கது" என்று அம்முனிவரிடத்தில் தெரிவித்துக்கொள்ள, மீண்டும் துர்வாஸர் அத்தேவர்கட்கு உரைக்கலாயினார். இப்பஸ்மத்தின் மற்றொரு அற்புதத்தையும் கேளுங்கள். இதுதான் விஷ்ணுவுக்கும் சங்கரருக்கும் (குணருத்திரர்) ஞானத்தை நல்கியது. மிக்க செல்வத்தைக் கொடுக்கக் கூடியது. சிவபிரான் தனது மார்பிலிருந்த பஸ்மத்தை நகத்தாலெடுத்துப் பிரணவம், காயத்திரி, பஞ்சாக்ஷரம்

இவற்றால் அபிமந்திரித்து விஷ்ணுவின் சிரசு முதலிய அங்கங்களிற் பூசி, "இது முதல் நினது ஹிருதயத்தில் ஈசுவரத்தியானஞ்செய்" என்று அருளிச்செய்ய, விஷ்ணுவுந் தியானஞ் செய்து "**சிவத்தைக் கண்டேன் கண்டேன்**" என்று சிவனைப் பணிந்து ஆநந்தமயமாயினர். பின்பு சிவபிரான் "பஸ்மாவை நாவிலிட்டுக்கொள்" என்றருளிச் செய்ய அப்படியே பஸ்மத்தை முதலில் உடம்பெங்கும் பூசிக்கொண்டு, பின்னர் அதனையுட்கொண்டனர். அவ்வாறு உட்கொள்ளவே விஷ்ணுவானவர் பரசிவப் பிரதிபிம்பம்போல மிகவும் ஆச்சரியமான காந்தியைப் பெற்று, சுத்தமான முத்துப்போல வெண்ணிறத்தை அடைந்தனர். அங்ஙனம் அடைந்தபின் அவர் சிவபெருமானை விளித்து, "ஓ விபுவே! பஸ்மாவினது ஞானத்தினால் உம்முடைய பிரபாவத்தைச் சொல்லமுடியாது. உமக்கு நமஸ்காரம், உமக்கு நமஸ்காரம். உம்மை யான் சரணமடைந்தேன். ஓ சம்புவே! உமது பாதகமலங்களிரண்டினும் எனக்கு எப்போதும் பக்தி யிருக்கவேண்டும். எனது பக்தன் பஸ்மதாரணத்துடன் கூடினவனாய் ஆகக்கடவன். ஆதல்பற்றியே இப்பஸ்மமானது ஐசுவரியத்தைக் கொடுக்கக்கூடிய

தெனறு சொல்லப்படுகின்றது'' என்று கூறினதாக வடமொழி வேதமே ஐயமற முழக்குமாயின் திருநீற றின்தன்மையை அளவுபடுத்திச சொல்லவும, நினைக்க வும முடியாதன்றோ! நம்மாழ்வார் "நெடுமாலடியார்'' என்றோதியதும இக்கருத்து கொண்டே.

அன்றியும, முன்னொரு காலத்தில இப்பெரிய நிலவுலகமானது ஜலப்பிரளயத்தில் ஒடுங்கினவுடனே தாமரைமலரில் வசிக்கும பிரமன் முதலிய பெருந்தே வர்களெல்லாம இறந்தார்கள். அப்போது அக்கொடிய பிரளயத்தில் விரிந்திருந்த ஓர் ஆலமரத்தின் இலையில் யாவர்க்கும அடைதற்கரிய வல்லபமுடைய திருமால் அறிதுயில் அமர்ந்தனர். அதுபோது அவரிடத்தில் அம்புலி சூடிய எமபெருமான் எழுந்தருளி, அவர் பார்த்து வியக்கும்படி அக்கொடிய பிரளயம் தமது திருவடிப்பரட்டின் அளவாக விரவும வண்ணம் நின்ற ருளினர். அவரைக்கண்ட நீலவண்ணராகிய திருமால் சிவபெருமானை நேரே தரிசித்தும் மதியாதவராய்த தம்பேதமையினாலே "நீர்யார்'' என்று அறிவு மயங் கிக் கூறினர். அதைக்கண்ட பரங்கருணைத் தடங்கடலா கிய சிவபெருமான் இவனிடத்திலுள்ள மாயையினாலே

இவ்வாறு மயங்கினனென்று திருவுள்ளங்கொண்டருளி, பரிசுத்தமான திருவெண்ணீற்றை அவருக்களித்து, அத்திருமால மனதிற்கொண்ட மாயையைப் போக்கினா. மாயைநீங்கிய அம்மால் அறிவு உதயமுடையவராய் "இடைவிடாது என்னை அடிமையாகவுடையஎம்பெருமானே! தேவரீர் இவ்விடத்திற்கு எழுந்தருளிவரப்பெற்றது அடியேன் முற்காலத்தில் செய்த பெருந்தவமேயாகும்" என்று கூறி அவரது திருவடித்தாமரைகளை வணங்கி வேண்டிய வரத்தைப் பெற்றார் என்று மகாஸ்காந்தம் கூறுமாயின், இகலோக செல்வத்தையும், பரலோக இன்பத்தையும், வீட்டையும் பயக்கத்தக்க பெருமையுடையது திருவெண்ணீறேயன்றி வேறு வேதோக்தமான பரமசாதனம் யாதுளது.

"மற்றொருகாலத்திலே முத்தமிழ்க்குரிய அகஸ்திய முனிவர் எழுந்தருளியிருக்கும் தமிழ்நாட்டிலே, சதுர் வேதங்களைப்பாராயணஞ்செய்யும் ஓர் வேதியன் மற்றொரு வேதியன் வீட்டுக்குச் சென்று அவனது மகரமீன்போலும் நீண்டகுண்டலமணிந்த காதையுடைய பார்ப்பனியைக் களவிற்புணர்ந்தான். அதை அப்பார்ப்பனியின் தலைவன் அறிந்து அவ்விடத்திற்கு

வந்து மிக்க கோபத்துடனே அவ்விருவரையும் பார்த்தான். ஒரே பாயிற்படுத்திருந்த அவ்விருவரையும் தன் கையிற் பிடித்துக்கொண்டு, சிறந்த வேதங்களை யுணர்ந்த அந்த வேதியனை உயிர் நீங்கும்படி வதைத்து, அவனது இரண்டு கால்களையும் கயிற்றாலிறுக்கிக்கட்டி, தனக் குண்டாகிய கொடுங்கோபத்துடனே இழுத்துக்கொண்டு போய் கடைவீதியிற் போட்டான். உதிரம் பெருக்கெடுக்க அம்மறையவனுடல் அவ்வீதியிற் கிடக்கையில் அதிக சமீபமாய்ப் பக்கத்திலுள்ள சுடலையிலிருந்த ஓர் நாய், அவ்வுதிரத்தைக் குடித்து அவனை நக்கினவுடனே அம்மறையவனெற்றியில் அந்நாயின்காலிற் படிந்திருந்த மயானச சாம்பர் பட்டபடியால் அவன் சுபாவத்திலே திருநீறணிந்து கொண்டதுபோல் விளங்கினன். அந்தக்ஷணத்திலே அம்மறையவனுயிரை யமதூதர்கள் தென்றிசைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தபொழுது அவன் நெற்றியிலிருந்த வெளிய தூளித்தின் சிறப்பினாலே திருநேத்திரங்களையுடைய சிவபிரான் கணங்கள முற்பட்டு, அதிவேகமாய் வந்து, கட்டியிருந்த கட்டையறுத்து, யமதூதரைத் துரத்திவிட்டு, நாய்க்காலிற் படிந்திருந்த மயானசசாம்பர் பதி

பப்பெற்ற பாககியததால அவனை யழைததுச சென்று, திருககைலாசததை யடைநதாரகள.'' என்று உபதேசகாண்ட முரைககினறது. விதிப்படி விளைவிதத விபூதிகளொனறினுளு சேராது, மயானததில பிணத்தைச சுடட சாமபா படிநதிருநத நாயின்கால நெற்றியிற படடமையினாலேயே சிவகணததவர்கள அம்மறைபவனைக கைலாசததுககு அழைததுச சென்றனரெனறால, விதிப்படி விளைவிதத திருநீறறைச சத்தியபுததியுடன மநதிரலோபமினறி அவவததானங்களுககு விதிதத அஙகுலப் பிரமாணபபடி தரிககின்றவாகள அடையததககப பேறறைக கூற யாரதரம. அது நிஜபகதி பெற்றாக்கே அநுபவமாம. பலவித பாவமலிநதிருநதும அபுததி பூரவமாக அணியப்பெற்ற நீறறின் பலனை ரண்டுமுனனர் அநுபவிககப்பட்டதெனறது இதனாற் கொளளக கிடககின்றது.

# உருத்திராக்ஷ விளக்கம்.

உருத்திரரது கண்ணிற் றோன்றினமையால் உருத்திராக்ஷமெனப் பெயர்பெற்றது. உருத்திர - அக்ஷம் என்னும் இருசொற்கள் உருத்திராக்ஷமெனத் தீர்க்க சந்தியாய்ப் புணர்ந்தன. உருத்திரர்-சிவபெருமான்; அக்ஷம் - கண்; என்பது அர்த்தம். எனவே உருத்திராக்ஷம் என்பதற்கு சிவபெருமானது கண் என்று பொருள் கொள்ளப்படும். உருத்திரராவார் பிறவித் துன்பமென்னும் பெருங்கடலுள் அகப்பட்டுழலும் ஆன்மாக்களையெல்லாம் தமது திருவருளென்னுந் தெப்பத்தினாலெடுத்து முத்திக்கரையிற் சேர்ப்பவர் என்பது உண்மைப்பொருள். இதனை "இன்னலங்கடலுட்பட்டோர் யாரையு மெடுக்குமாற்றால், உன்னரும் பரமமூர்த்தி யுருத்திரனெனும் பேர்பெற்றான்" என னும் ஸ்காந்த புராணச்செய்யுளாலுணர்க. இங்குக் கூறிய உருத்திரராவார் திரிமூர்த்திகளிலே ஒருவரல்லர். திரிமூர்த்திபரராகிய துரீய உருத்திரரே குறிக்-

கப்பட்டவர். இவ்வுருத்திரசப்தத்தின் உண்மையை புணராதார் (உபோதனம) அழுகையைச் செய்பவன் எனப் பொருள் விரித்து மயங்குவர். அந்தோ! அது பாவப்பயனையன்றி வேறல்ல. உருத்திர என்னுஞ் சொல்லுக்குரிய தெளிபொருளை எண்டுகூறுவாம்.

(1) ருத-ஸம்ஸாரதுக்கம், அதனை யொழிப்பவர்.

(2) ருத்-சப்தமப் பிரபஞ்சம், அதனைத் தம்வசப் படுத்தினவர். எனவே சர்வ சப்தங்களாலும் பிரதிபாதிக்கப்படுவர்.

(3) ருத்-ஆவரணம், அதனை யொழிப்பவர்.

(4) ருத-பிரஹ்மஞானம், அதனை நேரிலும் சதா சாரியனை அதிஷ்டித்தும் உபதேசிப்பவர்.

(5) ருத்திரா-சங்கார காலத்தில் சர்வான்மாக்களை யுங் கதறச்செய்பவர்.

(6) ருத்திரா-சகல நற்பிரவிருத்திகளையுந் தடுக்கும் தமோகுணத்தைத் தன் வசப்படுத்தினவர்.

(7) ருத்திரா-பிரஹ்மனுடைய முகார்ப்பவ லீலையில் அழுகையை அபிநயித்தவர்.

(8) ருத்திரர்-சப்தமய்ய பிரபஞ்சத்தை யொழிப்ப வர். எனவே மௌனானந்த நிஷ்டையை உபதேசிப்பவர்.

(9) ருத்திரர் - ஆன்மாக்களிடத்தமைந்த அஞ்ஞா னத்தை நோக்கித் தான் துயருறுபவர். எனவே பிறர் துயரம் சகிக்காமை என்னுங்கரு ணைக்கு நிதியாயுள்ளவர்.

(10) ருத்திரர் - ஸர்வேசுவரர் ஆதலால் சர்வஜகத் பயங்கரர்.

இன்னோரன்ன பலபொருள்கள் உருத்திர சப்தத் துக்கு விரிந்துகிடக்கின்றன. அதனால் உருத்திரநாமம் பிரமத்துக்குரிய தென்பது நன்குணரக் கிடக்கின் றது. சிவசம்பந்தமுடையா ரெவருக்கும் பூசுவது வெண்ணீறும், பூண்பது உருத்திராக்ஷமுமேயாம். எனவே! திருநீறு ஒன்றே முத்திப் பேற்றை யளிக்கு மென்று மேலே கூறியிருக்க, இப்போது உருத்திராக்ஷ முந் தரிக்கவேண்டியது அவசியமோவெனின், ஆம், அவசியந்தான். உடம்பினின்று தோன்றும் வியர்வை யினாலும், மழையினாலும், மனிதருடைய சரீரங்கள்

நெருங்கியிராய்தலினாலும், தெய்வீகமடைந்த விபூதி யின வடிவம மறையப்பெறும். அப்படி மறைந்தால கொடிய பூதஙகளினாலும, பராசுக்களினாலும, அசுரர் முதலிய தீயவாகளாலும, கிரகஙகளாலும வந்த நேரும. அவவாறு நேரிடாவண்ணம சிவசினனங் களாகிய விபூதி உருத்திராக்ஷஙகளை அணியுமாறு வேதஙகள விதிததுளளன.

## உருத்திராக்ஷத்தின் தோற்றம்.

தேவாகள திரிபுரததசுரர்களாலே தஙகளுக்கு நோநத துன்பததை ஸ்ரீகணட பரமசிவனுககு விண் ணபபஞ செய்துகொண்டபோது, பரமசிவன் தேவர் களின பெருந துன்பததைதத தமது திருவுளளத தடைதது, இரககமுறறு, அவர்கள துனபம நீஙகும காலவரையைக கருதி, ஆயிரந்தேவவருடம் தமமு டைய திரிநேத்திரங்களையும் மலர்ததிக்கொண்டிருபப அவைகளினின்றும் நீா பொழிநதன. சூரிய ரூபமாகிய வலககண்பொழிநத நீரிலே பன்னிரண்டு உருத்திராக்ஷ மரமும, சநதிரரூபமாகிய இடதுகண்பொழிநத நீரிலே ?று உருத்திராக்ஷமரமும, அககினி ரூபமாகிய

நெற்றிக்கண்பொழிந்த நீரிலே பத்து உருத்திராக்ஷமரமும் உதித்தன. வலக்கண்ணீரினின்று கபிலநிற உருத்திராக்ஷமும், அதினின்று செந்நிற உருத்திராக்ஷமும், அதினின்று பொன்னிற உருத்திராக்ஷமும் தோன்றின. இடக்கண் நீரினின்று வெண்ணிற உருத்திராக்ஷந் தோன்றிற்று. நெற்றிக்கண் நீரினின்று கருநிற உருத்திராக்ஷந் தோன்றிற்று. அவைகளுள் வெண்ணிற உருத்திராக்ஷம் பிராமமணசாதி எனவும், கபிலநிற செந்நிற உருத்திராக்ஷங்கள் க்ஷத்திரியசாதி எனவும், பொன்னிற உருத்திராக்ஷம் வைசியசாதி எனவும், கருநிற உருத்திராக்ஷம் சூத்திரசாதி எனவும் கூறப்படும். உருத்திராக்ஷம் சிவபெருமானது அக்கினி வடிவில் திருவெண்ணீற்றைப் போலவே அநாதியேயுள்ளதாயினும், ஸ்ரீகண்ட பரமசிவத்தினின்றும் வெளிப்பட்ட காரணத்தால் அது தோன்றிய காலத்தை நோக்கி திரிபுர சங்கார காலமே அதன் காலமென்று வேதங்கள் அறுதியிடுகின்றன. திரிபுர சங்காரகாலமும் கால அளவுக்கு உட்பட்டதல்லவென்பது அடியில் வரும் திராவிட வேதச் செய்யுளாலுணர்க.

எண்ணுடைய மூவ ரிராக்கதர்க ளெரிபிழைத்துக்
கண்ணுதலினந்தை கடைத்தலைமு னின்றதற்பின்
எண்ணரிலியிந்திரர் எத்தனையோ பிரமர்களும்
மண்மிசைமால் பலர் மாண்டனர் காண் டோணுக்கம்.

## உருத்திராக்ஷம் வேதோக்தமானது.

நூற்றெட்டு உபநிடதங்களுள்ளே திரிபுரதாபினி உபநிடதம், திரிபுரோப நிடதம், பஸ்மஜாபால உபநிடதம், பிருஹஜ்ஜாபால உபநிடதம், ராமரஹஸ்யோபநிடதம், அக்ஷமாலிகா உபநிடதம், ருத்ராக்ஷ ஜாபால உபநிடதம் ஆகிய இவைகள் உருத்திராக்ஷத்தைப்பற்றி சிறப்பித்துக் கூறுகின்றன. அவற்றுள் உருத்திராக்ஷ ஜாபாலம் உருத்திராக்ஷமணிகளின் உற்பத்தி, அளவு, முகம், தாரணமந்திரம், தாரணபலாதி விவரம் ஆகிய இவற்றைச் சொல்லுகின்றது. அக்ஷமாலிகை அந்தமணிகளின் நிறம், மாலைகளின் பேதம், மகிமை முதலிய விவரங்களைக் கூறுகின்றது. பிருஹஜ்ஜாபாலம்-மணிகளின் உற்பத்தி, தாரணம், பலாதி இவைகளைத் தெளிவாய்ப் போதிக்கின்றது. சிவபெருமானுடைய திருக்கண்களினின்றும் வெளிப்பட்ட நீரே விருக்ஷமாகி அவற்றின் பலனாகவிளைந்த உருத்திராக்ஷமே மகா புண்ணிய

மகிமைத்தென்பது வேதங்களாலே அறியப்படுதலின், அவை வைதிகமாவதற்கு யாதொரு இழுக்குமில்லை. விபூதி யுபநிடதமாகிய பஸ்மஜாபால உபநிஷத்தை எண்பத்தேழாவதாகவும், இவ்வுருத்திராக்ஷ ஜாபால உபநிடத்தை எண்பத்தெட்டாவதாகவுஞ் சேர்த்து வைக்கப்பட்டிருத்தலால் இவ்விரண்டிட முத்திக்கு இன்றியமையாத பரமசாதனங்களெனப் பெறப்பட்டன. பட்டவே அக்ஷமாலிகா உபநிடத்தை அறுபத்தேழாவது உபநிடதமாக வைத்து அதற்குமுன்னே பரமஹம்ஸபரிவிராஜகோபநிடத்தை அறுபத்தாறுவது உபநிடதமாக வைத்து வேதம் புகழ்ந்தமையால் ஸர்வசங்க பரித்தியாகஞ் செய்த தத்துவஞானத்தையுடைய சந்நியாசிகளுக்குங்கூட இது தள்ளத்தகாத பரம தாரணம் என்பது சுருதியின் சம்மதம்.

---

## உருத்திராக்ஷத்தின் பெயரும் பொருளும்.

உருத்திராக்ஷமானது அக்கம், கண்டி, கண்டிகை, கண்மணி எனப் பலபெயர் பெறும். அவற்றுள் அக்கமாவது - கண். மந்திரவாதிகள் தமது கட்பார்வையால்

விஷத்தை நீக்குவதுபோலவும், மீன்கள் முட்டையிட்டுத் திரும்பித் தம் கண்களாற் பார்த்தமாத்திரத்தில், முட்டைகளெல்லாம் மீனுருவம் அடைதல் போலவும், சிவபெருமான் தமது திருக்கண்களின் நோக்காகிய சட்சுர்தீக்ஷையினாலே ஆன்மாக்களின் மலபந்தத்தை நீக்கித் திருவருளுருவாக்கித் தம்முடன் இரண்டற நிற்கும் முத்திப்பேற்றை அளித்தல் போலவும், உயர்வொப்பில்லாத உருத்திராக்ஷமும் தன்னையணிந்த அன்பர்களுடைய மும்மலங்களையும் போக்கித் திருவருட்பேற்றைத் தந்து சிவபெருமானது கண்போல விளங்கலால் அக்ஷம் எனப் பெயர்பெற்றது. கண்டி அல்லது கண்டிகையாவது-குற்றங்களையும் துன்பங்களையும் கண்டிப்பதினாலும், மாலையாக விளங்குதலினாலும் அப்பெயர்பெற்றது. கண்மணியாவது - சிவபெருமானது திருக்கண்களினின்றும் பொழிந்த முத்துப்போன்ற நீர்வடிவாய் விளங்கலின் கண்மணி எனப்பெயர் பெற்றது. அன்றியும், கண்ணாகிய மணியென இருபெயரொட்டுப்பண்புத் தொகையாய்க் கொள்வதுமுண்டு. உவமவாகுபெயராய்க் கண்மணியைப்போன்றது என்றலும் பொருத்தமாம்.

## உருத்திராக்ஷ தாரணவகை.

உருத்திராக்ஷமானது ஒரு முகமுதல் பதினாறு முகமவரையிலுமுண்டு. வெண்ணிறமணி பிராமணராலும், கபிலநிற மணியும் செந்நிறமணியும் க்ஷத்திரியராலும், பொன்னிறமணி வைசியராலும், கருநிறமணி சூத்திரராலும் தரிக்கற்பாலன. மேற்சொன்ன மணிகள் கிடையாவிடின் கருநிறமணியே யாவராலும் தரிக்கத் தக்கதாம். வெவ்வேறு தானங்களில் தரிக்கப்படும் உருத்திராக்ஷமாலைகளுக்கு மணியளவானது "எண்ணளவு" என்றும், "எல்லையளவு" என்றும் இருவகைப்படும். அவற்றுள் எண்ணளவாவது—இன்ன தானங்களுக்கு இத்தனை எண்ணுள்ள மணிகள் தரிக்கவேண்டுமென்பதாம். அதாவது சிவாகமத்தின்படி சிகையிலே ஒருமணியும், தலையிலே முப்பத்தாறு மணியும், காதுகளிலே ஒவ்வொருமணி அல்லது அவ்வாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறுமணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டுமணியுங் கொண்ட மாலை தரிக்கற்பாலதாம். எல்லையளவாவது- இன்ன தானத்திற்றரிக்குமாலை இவ்வளவினதா யிருக்

கவேண்டுமெனபது. அதாவது கையிற்றரிக்குமாலை ,கைப்பருமனளவாகவும, சிரமாலை சிரத்தினளவாகவும். மாாபிற் றரிக்குமாலை பிடர்முதல் மார்பினளவினதா கவும அல்லது நாபிவரையினதாகவும் இருககவேண்டும். எநதெநத தானஙகளுககு எவ்வளவு சொல்லப்பட் டதோ அவ்வளவே தரிகக வேண்டும. முகம முகத் தைப் பொருநதவும், அடி அடியைப்பொருநதவும, இடையிடையே பொனனாயினும, வெள்ளியாயினும, தாமிரமாயினும, முததாயினும, பவளமாயினும, பளிங காயினும இட்டு, பட்டிலேனும், பருத்தியிலேனும இருபததேழு இழையினலாககிய கயிற்றில கோதது முடிசெய்து தரிககவேண்டும. பொன்,வெள்ளி, தாமிரம் முதலிய விவறறையிடாது நாகபாசம, பிரஹ்மமமுடி சாவித்திரி, விஷ்ணுககிரநதி முதலிய முடிச்சுகளில் ஒன்றையிடுதலும விதியாம.

நாகபாசமாவது-கயிற்றின் இருநுனிகளையும் எடு த்து நாலங்குலவளவில் தனிததனியாய் வலமாகவும் இடமாகவும இருமுடிசசுஇட்டு, அநத நுனியைப் பாம் பின்படமபோல முடிசசில் அகப்படுமபடி முடிவதாம.

பிரஹ்ம்ம முடியாவது-கயிற்றின் நுனிகளிரண்டை யும்மூன்றங்குலமளவெடுத்து அவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்த்துப் பிரதட்சணக் கிரமமாய்ச் சுற்றி, அந் நுனி வெளியில் தெரியாதபடி முடிவதாம்.

சாவித்திரியாவது-கயிற்றின் இருநுனிகளையும் வல மாகவும் இடமாகவும் நுனி வெளியில் தெரியாதபடி ஒரே முடிச்சுப்போல முடிவதாம்.

விஷ்ணுக்கிரந்தியாவது—பிரஹ்மம முடிச்சுப்போ விட்டு நுனிகள் உழுந்து பிரமாணம புசசவடிவாய் வெளியில் தெரியமுடிவதாம.

சிவமந்திரஜபம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணபடனம, தேவார திருவாசகபாராயணம், அவற்றைக் கேட்டல் தீர்த்தமாடல, விரதமனுஷ்டித்தல், சிரார்த்தஞ்செய் தல் முதலியவைகளைச் செய்யுங்காலங்களில் உருத்தி ராக்ஷதாரணம் அவசியம செய்துகொள்ளவேண்டும். உருத்திராக்ஷந் தரித்துக்கொண்டு மாம்ஸபோஜனம், மதுபானம, வியபிசாரம, சீட்டாடுதல் முதலிய பாவங் களைச் செய்தவர்களும், ஆசாரமில்லாது, நடப்பவர்

களும், தப்பாது நரகத்தில் வீழ்ந்து வருந்துவார். ஸ்நானஞ் செய்யுங் காலத்தில் உருத்திராக்ஷந் தரித்துக்கொண்டிருப்பின் அவ்வுருத்திராக்ஷ மணியிற்பட்டு வடியுமஜலம் கங்காஜலத்துக்குச் சமமாகும்.

## உருத்திராக்ஷ ஜபமாலையி னிலக்கணமும் ஜபிக்கும் வகையும்.

உருத்திராக்ஷத்தை மாலையாகத் தரிப்பதுமன்றி சிவமந்திரம், தேவிமந்திரம், கணபதிமந்திரம், சுப்பிரமணியமந்திரம் முதலிய மந்திரங்களை ஜபித்தற்கு மாலையாகவுங் கொள்ளுதல் மிகச்சிறப்பாம். ஜபமாலை 108, 54, 27, எனனும் அளவினவாயமணிகளாற் செய்தல்வேண்டும். ஜபமாலை கொள்ளுமிடத்து எல்லாம் ஒரேவிதமான முகங்களையுடைய மணிகளாயிருத்தல் அவசியம். பலவித முகமணிகளைக் கலந்து மாலைசெய்யின் குற்றமாம். ஜபிக்கும்போது ஜபமாலை அந்நியர் கண்ணிற்குப் புலப்படக்கூடாது. பிறர் காணுவண்ணம் பரிவட்டத்தினாலே மூடிக்கொண்டு ஜபிக்க வேண்டும். அப்போது ஜபமாலையின் மணிகள் ஒன்றோடொன்று தாக்கி ஓசையுறின் பாவமுண்டாம்.

ஜபமாலையை நடுவிரல் மூன்றிலும் வைத்துப் பெரு விரலினால் தள்ளவேண்டும். மோட்சத்தை விரும்புகிறவன் ஜபமாலையை மேல்நோக்கித் தள்ளியும், போகத்தை விரும்புகிறவன் கீழ்நோக்கித் தள்ளியும் ஜபித்தல் விதியாம். நாயகமணியைக் கடந்து ஜபிக்கின் பாவமுண்டாகும். ஜபஞ்செய்யும் காலத்து கிழக்கு நோக்கி ஜபிக்கின் விருமபியயாவும தன்னருகில்வரும். தெற்குநோக்கி ஜபிக்கின் அபிசாரம பலிக்கும். மேற்குநோக்கி ஜபிக்கின் தனலாபம உண்டாகும். வடக்கு நோக்கி ஜபிக்கின வியாதி நிவாரணம் உண்டாகும். இவ்வாறு ஜபிக்குங்கால் சடையணிந்திருத்தல், தலையில் வஸ்திரந்தரித்தல், குடுமியை விரித்திருத்தல், கோவணம அணியாதிருத்தல, கைவிரலில் பவுத்திரமில்லாதிருத்தல, பிறரோடு வார்த்தையாடல், கழுத்தில் வஸ்திரத்தைச சுற்றியிருத்தல், பரிசுத்தமில்லாதிருத்தல், நாய், கழுதை, பன்றி முதலியவற்றையும் புலையர் கொலையாளிகள முதலாயினோரையும் பார்த்தல் ஆகிய இசசெயல்களை ஒழித்திருத்தல் வேண்டும். அன்றியும் கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோமபல், வாதம் ஆகிய இவை

களும் ஜபஞ்செய்யும்போது ஆகாவாம். எப்பொழுதும் ஜபத்தை ஆசனத்தின்மீதிருந்தே செய்தல் முறையாம். நாற்றெருக் கூடுமிடத்திலும், படுக்கையிலிருந்து கொண்டும், நடந்துகொண்டும, நின்றுகொண்டும், இருட்டிலும். அசுத்தபூமியிலும், வாகனத்தின்மீதிருந்து கொண்டும், தெளியாதமனதுடனும ஜபிக்கில் கெடுதி விளையும். ஜபமானது உத்தமம், மத்திமம், அதமம என மூவகைப்படும. இமமூன்றும முறையே மானசம, உபாம்சு, வாசகம் எனப் பெயர்பெறும். இவற்றுள மனசினலே ஜபித்தல் உத்தமம. பக்கத்திருப்போர் கேளாவகை ஜபித்தல் மத்திமம். பிறர் கேட்கும்படி ஜபித்தல் அதமம். உத்தமமாகிய மானசம் மோட்சத்துக்குரியது. மத்திமமாகிய உபாம்சு முத்திக்கும் புத்திக்கும் உரியது. அதமமாகிய வாசகம் அஷ்டகர்மங்களுக்கும் உரியது. மானச ஜபத்திற்கு மாலையை மேலேற்றியும், உபாம்சு, வாசகம் என்னும் இரண்டிற்கும் மாலையைக் கீழிறக்கியும ஜபிக்க வேண்டும்.

## உருத்திராக்ஷ தாரண முதலியவற்றால் பலனடைந்தவர்.

உருத்திராக்ஷ தாரணத்தாலும், தரிசனத்தாலும், பரிசத்தாலும் இகலோக பரலோக சாதனங்களையும், வீட்டையும் அடைந்த ஆன்மாக்கள் அளவிறந்தனவாம். அவற்றுள் பதமுத்தியடைந்த சிலரது சரித்திரத்தை மாத்திரம் ஈண்டு குறிப்பிப்பாம். நந்தி என்னுந் தேசத்திலேயுள்ள சிவஸ்தலத்தில் நந்தை என்னும் பெயருடைய தேவதாசி ஒருத்தியிருந்தாள். அவள் தான்வளர்த்துவந்த சேவலுக்கும் குரங்குக்கும் உருத்திராக்ஷம் அணிந்துவருவது வழக்கம். அவைகள் உயிர் துறந்தவுடன் முறையே காஸ்மீரதேசத்து அரசனான பத்திரசேனன் மனைவியிடத்தில்சுதனமா என்னும் பெயருடைய புத்திரனாகவும், அவன் மந்திரியின் மனைவி வயிற்றில் தாரகன் என்னும் பெயரை யுடைய புத்திரனாகவும் பிறந்து உலகத்தை யாண்டு முத்தியடைந்தன. அவ்விரண்டிற்கும் உருத்திராக்ஷம் அணிவித்தமையால் நந்தை என்னும் தேவதாசியும் மோட்சமடைந்தாள். புஷ்கரதேசத்து அரசனாகிய

சௌமியன் என்பவன் அணிந்து சத்துருபயம நீங்கப் பெற்றான். அவன் மனைவியாகிய வசுமதி என்பவள் தரித்து விசேட அழகும, சற்புத்திரப்பேறும, சிவ பெருமான் றிருவருளும பெற்றாள். காலஞானி என் னும அரசபத்தினி தன நாயகனுன கமலாக்ஷன என் னும அரசன் தன்னைப்போல உருத்திராக்ஷந் தரியா மையால் அவனோடு கூடச் சம்மதிக்காது திருமாலால் அதன பெருமையை உபதேசிப்பித்து அவனை அணி யும்படிச் செய்து அவனோடுவாழ்ந்து முத்தியடைந் தாள். மாகர நாட்டிலே இருந்த சாந்திகன் என்பவன் உருத்திராக்ஷந் தரித்திருந்தமையால் காளியினாலே பலியாக உண்ணப்படாது வேண்டிய வரங்கள் பெற்று அரசாட்சி செய்து முத்தியடைந்தான். இவ்வாறு உருத்திராக்ஷ தாரண முதலியவற்றால் பலனடைந்தவர் கள இன்னும அநேகருளா. விரிக்கிற் பெருகும்.

## முடிவுரை

இதுகாறும கூறியவாற்றானே உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களையும் தனக்கு அங்கமாகக் கொண்டு அவற்றிற்கெல்லாம் மாதுருஸ்தானமாய் விளங்கும சம யம் **சைவசமயம்** எனவும், அதில் கூறப்பட்ட சைவத்

திறமாகிய சித்தாந்தசைவம் சமயாதீதம் எனவும், சமயா தீதப் பழம்பொரு ளாவர் அயன், அரி, அரன் என்னும் திரிமூர்த்திகளுக்கும் அப்பாற்பட்ட சிவபெருமான் எனவும், அவரது திருமேனியில் இயற்கையாகப் பிரகாசித்தொளிரும் விபூதி ருத்ராக்ஷங்கள் பிரஹ்மம வித்தைக்கு அங்கமான சைவபூஷணங்கள் எனவும், அவற்றைச் சீவர்கள் அணிதல் பசுத்துவ நீக்கத்துக்கும் சிவத்துவ விளக்கத்துக்கும் அறிகுறியாம் எனவும் எடுத்து விளக்கிக் காட்டப்பட்டன. சிவ சின்னங்களாகிய விபூதி ருத்ராக்ஷங்களின் பெயர்களும் அர்த்தங்களும், இலக்கணங்களும், தாரணவகைகளும், அருட்செயல்களும், மஹிமைகளும் ஆகிய இவைக ளெல்லாம் அடியேனுடைய அற்ப அறிவுக்கெட்டியவாறு முன்னோருரைத்தபடி சுருதி, யுக்தி, அநுபவங்களுக் கியைய யாவரும் எளிதி லுணருமவண்ணமவரையப்பட் டன. இதில் அடங்காத விஷயங்கள் இன்னும் அநே கமுள. அவைகளை நூல்வாயிலானும், சற்குருமுகத் தானும் உணர்ந்துகொள்க. ஞானங்கமாகிய சிவசின் னங்களும், சித்தாந்தசைவ அன்பர் கூட்டங்களும் எக்

காலத்திலும் நனிவாழ்க. மெய்கண்ட சந்தான சாஸ்திரங்கள் மேன்மேலும் பெருகி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

பரமாசாரிய சுவாமிகள்.

## நால்வர் சிறப்பு.

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனுஞ்
சிற்கோல வாதவூர்த் தேசிகனு—முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறைநூ லெங்கே
எந்தைபிரா னைந்தெழுத் தெங்கே.

சந்தானாசாரிய சுவாமிகள்

## நால்வர் சிறப்பு.

அத்துவித மெய்கண்டா னருணந்தி சம்பந்தன்
முத்தியளி கொற்றவனு முந்திலரேல்-இத்தலத்தில்
அத்துவித மெங்கேநல் லாகமமெங் கேமதப்பொய்
கொத்துவித முத்தியெங் கே.

திருச்சிற்றம்பலம்

முற்றிற்று.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருஞான சம்பந்த சுவாமிகள்

திருவாய் மலர்ந்தருளிய

# திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம்.

## பண் — காந்தாரம்.

## பறையின் வரலாறு.

திருச்சிற்றம்பலம்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே. (க)

வேதத்தி லுள்ளது நீறு, வெந்துயர், தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. (உ)

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (௪)

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. (௫)

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே (௬)

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண் ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே. (௭)

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. (௭)

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே. (அ)

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல வுடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்டமி டற்றெம் மால வாயான் திருநீறே. (கூ)

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. (ய)

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற் றதீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. (கக)

திருச்சிற்றம்பலம்.

இந்தத் திருப்பதிகம் நின்றசீர் நெடுமாற நாயனருக்கு உற்ற வெப்புநோயை "ஆலவாயண்ணலே, மன்னுமா நிராமயமாகி மருந்துமாய்த் தீர்ப்பீர்" என்று ஓதித் தீர்த்தருளியது.

கோபில் பிரஸ், திருவல்லிக்கேணி-மதராஸ்.